பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 09 2024 **MONDAY 7.15 PM**
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சிப்பணிகளை வலுப்படுத்தும் இரண்டாயிரத்து 291 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் சிலைகளை வைக்க காவல்துறை அனுமதி அளிக்கக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- தெலங்கானாவில் மழை வெள்ளத்தால் 16 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

- பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<>>>>>>**

செமி கண்டெக்டர் இயக்கத்தின்கீழ், புதிய உற்பத்திப்பிரிவை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், குஜராத் மாநிலம் Sanand-ல் மூன்றாயிரத்து 300 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

நாளொன்றுக்கு 60 லட்சம் Chips உற்பத்தி செய்வதற்கான திறனுடன் இந்த தொழில்பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

மும்பை - இந்தூர் இடையே புதிய ரயில் வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் 18 ஆயிரத்து 36 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வகை செய்யும் மூவாயிரத்து தொள்ளாயிரத்து 79 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர் அறிவியல் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆறு முக்கிய அம்சங்களை இந்த திட்டம் கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த 23 ஆண்டுகளுக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இது உதவிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சிப்பணிகளை வலுப்படுத்தும் 2 ஆயிரத்து 291 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை வோளண்மைக்கும் எந்தவொரு பருவ காலத்திலும் விளையும் பயிர்களை உருவாக்க ஊக்கமளிக்கும் வகையில் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய கல்விக்கொள்கை வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தோட்டக்கலை பயிர் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் 860 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிஜேபி-யின் தேசிய அளவிலான உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த இயக்கத்தை தொடங்குவதில் தாம் பெருமைப்படுவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, உலகின் மிகப்பெரிய கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று கூறினார்.

ஜனநாயக அடிப்படையில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதுப்பித்தல் பணிகள் ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிஜேபி-யில் மட்டும்தான் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, தனித்துவம் கொண்ட கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு துணிச்சலான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், இதன் காரணமாக அனைத்துத்துறைகளும் வளர்ச்சி கண்டிருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மேலும் ஒரு வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

ஆறு பேர் கொண்ட இந்த பட்டியலின்படி, ரஜோரி தொகுதியில் திரு Iftkar Ahmed போட்டியிடுகிறார்.

<<<<<>>>>>>

சண்டிகர் - தில்லி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள Shambhu எல்லைப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் குறைகளை களைவதற்கு குழு ஒன்றை உச்சநீதிமன்றம் ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள், திரு Suryakant திரு Ujjal Bhuyan அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு Nawab Singh தலைமையிலான இந்தக்குழு முதலாவது கூட்டத்தை ஒருவார காலத்திற்குள் நடத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகளின் போராட்டத்தை அரசியலாக்க வேண்டாம் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

<<<<<>>>>>>

நெட்ஃபிளிக்ஸ் ஒளிபரப்பும், ஐ சி 814 என்ற இணையத்தொடரில் சர்ச்சைக்குரிய அம்சங்கள் இடம்பெற்றது குறித்து விளக்கம் கோரி தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், அந்த நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் நாளை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தொடரில் சில கதாபாத்திரங்கள் குறித்து எழுந்த சர்ச்சையையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

தெலங்கானாவில் மழை வெள்ளத்தால் 16 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு ஸ்ரீதர் பாபு கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

Khammam, Mahabubabad மற்றும் Suryapet பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

Khammam மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி பார்வையிட்டார்.

ஆந்திராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விஜயவாடாவில் முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு பார்வையிட்டு நிவாரணப்பணிகளை விரைவுபடுத்தினார்.

<<<<<>>>>>>

கேரளாவில் திரைத்துறை தொடர்பான பாலியல் அத்துமீறல் குறித்து காங்கிரஸ் இதுவரை கருத்து தெரிவிக்காதது ஏன் என்று பிஜேபி-யின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ராஜீவ் சந்திரசேகர் வினவியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் குறித்து காங்கிரஸ் கருத்து தெரிவிக்காமல், மவுனமாக உள்ளதாக குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தின் தலைமை தகவல் ஆணையராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் Jarken Gamlin இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இட்டானாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் லெப்டினனட் ஜெனரல் திரு K T Parnaik அவருக்கு பதவிபிரமாணம் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு Pema Khandu மற்றும் உயரதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப மையம், ஜவுளித்துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 14 நாட்கள் கண்காட்சி இன்று புதுதில்லியில் தொடங்கியது.

160-க்கும் மேற்பட்ட அரங்குகள் இதில் இடம்பெற்றுள்ளன.

ஆடை வடிவமைப்பு தொழிநுட்பத்தின் இந்நாள் மற்றும் முன்னாள் மாணவர்கள் மற்றும் கைவினைக்கலைஞர்களின் உற்பத்திப்பொருட்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

<<<<<>>>>>>

தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் சிலைகளை வைக்க காவல்துறை அனுமதி அளிக்கக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு ஜெயச்சந்திரன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையிலான சிலைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

கண்தானம் குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தேசிய கண் வங்கியின் தலைவர் டாக்டர் ராதிகா டான்டன் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய கண்தான இருவார நிகழ்ச்சியையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

கண் தானம் செய்வது அதனை பெறுபவருக்கு புதிய வாழ்க்கையை தருவதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் டாக்டர் ராதிகா டான்டன் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

சென்னை – யாழ்பாணம் இடையேயான இண்டிகோ நிறுவனத்தின் தினசரி விமான சேவை தொடங்கியுள்ளது.

சென்னையிலிருந்து 52 பயணிகளுடன் யாழ்பாணம் சென்ற இந்த விமானம், 75 பயணிகளுடன் சென்னைக்கு திரும்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் நேரிட்ட நிலச்சரிவில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

வைஷ்ணோ தேவி கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள ஹெலிகாப்டர் தளம் அருகே இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த ஒரு சிறுமி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா, இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

பேட்மிண்டன் போட்டியில் நிதேஷ்குமார் தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 18-21, 23-21 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Daniel Bethell-ஐ வென்றார்.

பாராலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்லும் முதலாவது இந்தியர் என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

ஆடவர் வட்டு எறிதலில் இந்தியாவின் Yogesh Kathuniya வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா, இதுவரை இரண்டு தங்கம், மூன்று வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 22-ஆவது இடத்தில் உள்ளது.

-----------------

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Divyanshi வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------------

ஆசிய சப்-ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Ravi Sihag, Lakshay Budhwar, Naman Kumar, Lakshya Balhara ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------------

ஸ்வீடனுக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்கேற்பதிலிருந்து சுமித் நாகல் விலகியதையடுத்து, அவருக்கு பதிலாக 16 வயதான Manas Dhamne அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்போட்டி ஸ்வீடனின் Stockholm –மில் வரும் 14-ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<<END>>>>>>